**ஹிக்கடுவ நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 26 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ஹிக்கடுவ நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நெறிமுறை அடிப்படை அபிவிருத்தி மானியங்களின் கீழ் ஹிக்கடுவ வாராந்த சந்தையை அபிவிருத்தி செய்தல் மற்றும் வலமுல்ல தகன கூடத்திற்கு மின் பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்தற்காக பெற வேண்டிய மூலதன உதவி ரூபா 2,100,000 தொகை பெற வேண்டிய மூலதன உதவி என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான டெங்கு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 62,850 தொகை டெங்கு நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் கணக்கிற்கு வரவு வைத்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நிலுவையாகக் காணப்பட்ட ஒரே தடவையில் செலுத்தும் கட்டணம் ரூபா 570,127 தொகையினை பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மிகைகள் மற்றும் பற்றாக்குறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 179,278,946 தொகைக்கான 10 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 37,436,769 தொகை ஆகும்.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2014 ஆண்டின் போது நாரிகம பதன பாதையின் பாலம் நிர்மாணிக்கும் நிர்மாண வேலைக்காக பெறவேண்டிய ரூபா 156,657 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2004 ஆண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து சபையின் வடிகால் முறைமையை நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த ரூபா 15,076,729 இற்காக கடன் தொகையை செலுத்துவதற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) 2008 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை சபையின் 03 நிர்மாண வேலைகளுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 941,801 தொகையை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 110,983,104 தொகைக்கான 05 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப் பிரமாணம் 101 முதல் நிதிப் பிரமாணம் 110 வரை | - | காணாமல் போதல், சேதமடைதல் தொடர்பாக உரிய அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்காததுடன் சேதங்கள் மீதான பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571(1)(2) | 1,680,421 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள 10 வகையான வைப்புக்கள் மீதிகளை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 ஜுலை 10 திகதி வெளியிடப்பட்ட PED/A அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 02/2015 | - | பயன்படுத்தப்படாமல் அழிவுறும் நிலையில் காணப்பட்ட 05 பழைய வாகனங்கள் அப்புறப்படுத்துவதற்காக வேலைத்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கை | - | சபைக்கு சொந்தமாகக் காணப்படும் கணினிகள் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துகள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,752,199 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 24,438,894 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

கணக்காய்விற்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கிழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 21,878,000 | 17,887,864 | 16,461,516 | 26,357,008 | 21,778,000 | 17,842,076 | 15,509,904 | 24,235,904 |
| வாடகை | 8,220,000 | 2,940,230 | 2,906,555 | 4,672,045 | 8,760,000 | 3,158,570 | 3,029,500 | 4,646,770 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,836,000 | 598,505 | 654,365 | 376,520 | 2,336,000 | 167,800 | 194,125 | 540,074 |
| | 31,934,000 | 21,426,599 | 20,022,436 | 31,405,573 | 32,874,000 | 21,168,446 | 18,733,529 | 29,422,748 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 31,934,000 தொகையும், சிட்டையிடப்பட்ட வருமானம் 21,426,599 தொகையும் ஆகும். ஆரம்ப நிலுவை ரூபா 29,422,748 தொகையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 50,849,347 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 20,022,436 தொகையாகக் காணப்பட்டமையினால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 31,405,573 தொகையாகக் காணப்பட்டது.

### 2.2.3 வீதவரி

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 21,878,000 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 17,887,864 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வருமானத்தில் 82 சதவீதம் சிட்டையிடப்பட்டிருந்தது. சேகரிக்கப்படவேண்டிய வருமானத்தில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 16,461,516 தொகையாகக் காணப்பட்டதுடன், அது 39 சதவீதம் ஆகும். இதன் காரணமாக வருட இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 26,357,008 தொகையாக காணப்பட்டதுடன், நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 255 பிரிவு 170(2) இன் பிரகாரம் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்துவது தொடர்பாக சபை கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 வாடகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 8,220,000 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 2,940,230 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வருமானத்தில் 36 சதவீதம் மாத்திரம் சிட்டை இடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்படவேண்டிய வருமானத்தின் சேகரிக்கப்பட்ட வருமானம் 38 சதவீதமாகும் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 4,672,045 தொகையாகக் காணப்பட்டதுடன், நிலுவை தொகையை அறவீடு செய்தற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் அதிகாரம் 255 பிரிவு 170(2) இன் பிரகாரம் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்துவது தொடர்பாக நகர சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 1,836,000 தொகையாக காணப்பட்டதுடன், சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 598,505 தொகை ஆகும். ஆண்டின் போது சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் சேரிக்கப்பட்ட வருமானம் ரூபா 654,365 தொகையாகக் காணப்பட்டதுடன் அது 53 சதவீதமாகும்.

### 2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயளாலரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 48,525,761 மற்றும் நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 3,149,383 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும்

நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயல் நடவடிக்கை திட்டம்**

ஆக்கப்பட்டுள்ள துணை விதிகளின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 29 செயல்பணிகள் தொடர்பாக செயல் நடவடிக்கை திட்டமென்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களைக் பெற்றுக் கொள்ளாமை**

2004 ஆண்டு ஹிக்கடுவ நகரத்தில் மழை நீர் வடிந்து செல்வதற்காக நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு திட்ட கடனின் கீழ் வடிகால் முறைமையொன்று தயாரிப்பதற்காக ரூபா 16,540,616 தொகை நூற்றிற்கு 8% வட்டி அடிப்படையில் பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 15,076,726 இற்கான கடன் மீதியொன்று செலுத்த வேண்டியிருந்த போதிலும், மேற் கூறிய வடிகால் முறைமையை நிர்மாணித்ததற்கான சாட்சிகள் ஏதும் காணப்படவில்லை.

**(இ) செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

2017 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் தகன கூடத்திற்கு மின்பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,300,000 தொகை ஒதுக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதிவரை மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்திருக்கவில்லை.

**(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஏப்ரல் 20 திகதிய 2015/53 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 42 ஆக அதிகாரத்தின் கீழ் குப்பைகள் தொடர்பாக அனைத்து செயன்முறைகளைப் போலவே விற்பனை செய்தலும் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய விடயம் ஒன்றாகியிருந்ததுடன். சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் மொன்றோவியா தோட்டம் குப்பை செயற்களத்திற்கு போடப்படுவது தவிர இது தொடர்பாக வேறு திட்டமொன்று மற்றும் வேலைத்திட்டம் சபையில் காணப்படவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

**(அ) ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகைகள்**

ஆளணித்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 08 ஆரம்ப பதவிகளில் மிகையும் 07 இரண்டாம் தர பதவிகள் வெற்றிடமும் காணப்பட்ட போதிலும், மிகைப் பதவிகளை

முறைப்படுத்துவதற்காக அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) பதவியணிக் கடன்**

தற்காலிக அடிப்படையில் சேர்க்கப்பட்ட, சேவையில் இருந்து ஓய்வு பெற்ற இறந்த மற்றும் சேவையை விட்டுச் சென்றுள்ள 15 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 93,200 தொகை 2008 ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 30 வாகனங்களில் 06 வாகனங்கள் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட போதிலும், அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையின் 03 வாகனங்கள் திருத்த வேலைகளுக்காக வாகன செயற்தளத்திற்கு அனுப்பப்பட்டு 1½ வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தது. திருத்த வேலைகளுக்காக கழற்றி இருந்த இந்த வாகனம் மீளாய்வாண்டு இறுதிவரை திருத்த வேலை பூர்த்தி செய்திருக்காததுடன் அது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமாக கை டிரக்டர் ஒன்று மற்றும் பெரிய டிரக்டர் ஒன்று மற்றும் நீர் பவுசர் என்பன 02 வருடங்களுக்கு மிகையான காலம் திருத்த வேலைக்காக வாகன செயற்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்ததுடன், திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான ரூபா 11,637,149 தொகை பெறுமதியான 03 வாகனங்கள் மற்றும் பெறுமதி கணிக்கப்படாத யூடொன்க் அதிர்வு ரோல் ஒன்று மற்றும் நிகொலியா பாதை தகர்க்கும் இயந்திரம் என்பன பயன்படுத்தப்படாமல் வாகன செயற்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 05 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 13,403,005 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், 03 செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 5,463,001 தொகை காணப்பட்டது.

(ஆ) 06 வருமான விடயங்களில் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 202,416,060 தொகை காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீட்டு மூலதன செலவு ரூபா 220,606,000 தொகை ஆக இருந்ததுடன், உள்ளவாறான மூலதன செலவுகள் ரூபா 11,378,675 தொகை ஆக இருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீட்டு ஏற்பாடுகள் 95 சதவீத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செயற்பட்டிருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்

2009 ஜூன் 09 தகதி இலக்கம் DMA/2009(i) இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகிறது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமை |
| | | (ii) | முன் கொண்டுவரப்பட்ட கணக்கு மீதிகளை தீர்க்காமை |
| | | (iii) | நிலையான சொத்துக்களை ஆவணப்படுத்தாமை. |
| (ஆ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | விளையற்ற வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | ஏற்பாடுகள் சேமிக்கப்படல். |
| | | (ii) | வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் காணப்படல். |
| (ஈ) | பதிவேடுகள் பேனப்படல் | (i) | பதிவேடுகள் பேனப்படாமை. |
| (உ) | மனித வள முகாமைத்துவம் | (i) | வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| | | (ii) | கடன் மீதிகளை அறவீடு செய்யாமை. |
| (ஊ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்காக போதியளவான வேலைத்திட்டமென்று செயற்படுத்தாமை. |
| | | (ii) | நிலுவை ஒரே தடவையில் பெறும் பணத்தை அறவீடு செய்யாமை. |